2026 மார்ச் மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 136/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

திரு.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW8 – காந்தி |
| கணவர் பெயர்: | முருகன் |
| ஊர்: | மாரியம்மன்கோவில்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | மில்வேலை |
| வயது : | 45 |

13.03.2026

(1, 5 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 2, 3, 4, 6, 7, 8, 9 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, மாரியம்மன்கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் மில்லில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கின் பால்பாண்டி என்பவரின் வீட்டில் ஒத்திக்கு குடியிருந்து வருகிறேன். பால்பாண்டி என்பவர் தற்போது உயிருடன் இல்லை. பால்பாண்டி எங்கள் வீட்டின்

உரிமையாளர் ஆவார், அவர் மருந்து குடித்து இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். சத்தம் கேட்டு பால்பாண்டி என்பவர் வீட்டிற்கு போனோம். அங்கு ஆம்புலன்ஸ் இருந்தது, பால்பாண்டி அழைத்து சென்றார்கள். நடந்த பிரச்சனை குறித்து எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 08.03.2015ம் தேதி மதியம் சுமார் 3.30 மணியளவில் பால்பாண்டி அவர் குடியிருந்து வந்த வீட்டில் வைத்த விவசாயத்திற்கு பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி மருந்தை குடித்துவிட்டதாகவும், ஆம்புலன்ஸ் மூலம் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், இந்த விசயமாக நான் எனது கணவரிடம் சொன்னதும், தேனியிலிருந்து பால்பாண்டியை பார்ப்பதற்காக க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பால்பாண்டி சிகிச்சை பலனின்றி 5.20 மணியளவில் இறந்துவிட்டதை தெரிந்து கொண்டோம். எனது கணவர் என்னிடம் பால்பாண்டிக்கு கடனாக கொடுத்த பணம் மற்றும் வட்டியை கேட்டு தொந்தரவு செய்ததால் அவர் மருந்து குடித்து இறந்துவிட்டார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது பால்பாண்டி என்பவர் வீட்டில் குடியிருந்து வருவதால் எதிரிகளுக்கு ஆதரவாக அரசு தரப்பிற்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :- இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 13.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.13 18:49:53 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
13.03.2026